**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 83 /2023 PW .1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலு | தந்தை/கணவர் பெயர்: சின்னையா | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.06.2026

---

**(1,2 எதிரிகள் ஆஜர்)**

**<u>15.06.2026 முதல் விசாரணை</u>:**

1. நான் தற்போது நெற்குப்பையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகளைத்தெரியும். எனது வயலுக்கு அருகே வயல் வைத்துள்ளார்கள். அதன் மூலம் தெரியும். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு தேதி ஞாபகமில்லை. தை மாதம் ஒரு நாள் காலை 11.00 மணியளவில் நான் வயலில் நெல் நடவு செய்ய சென்றிருந்தேன். அப்போது சேவூகன் என்பவரது மாடு எனது வயலில் கதிர்களை மேய்ந்தது. ஏற்கனவே இது போல் பல முறை மேய்ந்துள்ளதால் பலமுறை நான் சொல்லியும் கேட்காததால் மேற்படி மாட்டின் கயிறை பிடித்து நான் இழுத்தேன். அப்போது சேவூகன் என்னை தேவுடியா மகனே என தகாத வார்த்தைகளால் திட்டினார். அப்படி தான் மேயும் என்றும் கூறினார்.

2. அப்போது நானும் ஒருபுறமும், சேவுகன் ஒரு புறமும் மேற்படி மாட்டின் கயிறை இழுத்துகொண்டிருந்த போது சேவுகன் மகன் என்னை பின்னால் இருந்து பிடித்துகொண்டார். சேவுகன் கல்லை எடுத்து எனது இடது கண்புருவத்திற்கு மேல் அடித்து காயத்தை ஏற்படுத்தினார். எனக்கு இரத்தம் வலிந்தது. சேவுகன் என்னை முதுகிலும் அடித்தார். நான் காயம்பட்டவுடன் எனது வாகனத்தில் காவல் நிலையத்திற்கு சென்றேன். அங்கே என்னை மருத்துவமனைக்கு செல்லுமாறு அறிவுறுத்தினார்கள்.

3. அதன் பெயரில் நான் பொன்னமராவதி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கே முதலுதவி சிகிச்சை பெற்று மேல் சிகிச்சைக்காக புதுக்கோட்டை

அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் 23 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். கண்புருவத்திற்கு மேல் ஏற்பட்ட காயத்திற்கு தையல் போட்டார்கள். நான் நடந்த சம்பவம் குறித்து நெற்குப்பை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் அ.த.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீஸ்சார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

4. நெற்குப்பை காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தை போலீஸ்சார் எழுதிக்கொண்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதியிலிருந்து 3 நாட்கள் கழித்து புகார் பதிவு செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மருத்துவமனைக்கு சம்பவம் நடந்தன்று மாலை 06.15 மணியளவில் சென்றேன். நெற்குப்பைக்கும், பொன்னமராவதி அரசு மருத்துவமனைக்கும் 20 நிமிடத்தில் சென்று விடலாம். நான் மதியம் 01.00 மணிக்கு நெற்குப்பை அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். போலீஸ்சார் விசாரணையில் நான் மதியம் 01.00 மணிக்கு நெற்குப்பை அரசு மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன் என்று விவரத்தை சொல்லியுள்ளேன். பல முறை எனது வயலில் எதிரி மாடு மேய்ந்தது சம்மந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை.

5. சேதமதிப்பு தொகை புகாரில் சொல்லவில்லை. சேவூகன் வேகமாக நடக்கமுடியாத மாற்றுதிறனாளி என்றால் நொண்டி நடப்பார். சம்பவம் நடந்தவுடன் கல்லை அங்கே விட்டு சென்றிருந்தார்கள். இன்றுவரை சம்பவம்இடத்தில் தான் கல் கிடக்கிறது. போலீஸ்சார் விசாரணையில் எதிரி முதுகில் அடித்த விவரத்தையும் சொல்லியுள்ளேன். புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் எனக்கு காலில் கட்டு எதுவும் போடப்படவில்லை.

6. CC–28/2023 எதிரிக்கொடுத்த வழக்கு என் மீது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் போது சம்பவ இடத்தில் என்னை தவிர வேறு யாரும் இல்லை. சம்பவம் நடக்கவே இல்லை என்றாலும் எதிரிகொடுத்த புகாரில் இருந்து தப்பிபதற்காக பொய் வழக்கு தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. 2ம் எதிரி சம்பவம் இடத்தில் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி மாற்று திறனாளி என்று தெரிந்தும் அவரை அடித்து தாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.